# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 29/2023

## வழக்கு சாட்சி :PW3(LW3)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகவேணி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | பாபு | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | குடுமியான்மலை | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 49 |

(2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 04th day of November 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**முதல் விசாரணை**

நான் தற்போது குடுமியான்மலையில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன் .கடந்த 07.10.2021 ம் தேதி மாலை 06.00, 06.15 மணியளவில் எனக்கு அ.சா. 1 நிரோஷா எனக்கு போன் செய்து என்னை சக்திவேல் மற்றும் அவரது குடுமபத்தார்கள் அடித்துவிட்டதாக சொன்னார். ஏன் அடித்தார்கள் என கேட்டேன். அவரால் பேச முடியாமல் என்னை கிளம்பி வருமாறு மட்டும் சொல்லி போனை வைத்து விட்டார். நான் உடனே 10 நிமிடத்தில் கிளம்பி அவரது வீட்டிற்கு வந்தேன். அவரால் பேச முடியாமல் மயக்க நிலையில் இருந்தா ர்'. கையில் லேசாக காயங்கள்இருந்தது . தலையிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் அவரை எனது இரு சக்கர வாகனத்தில் நடுவில் அமர வைத்து எனது மகன் ஓட்டினார் ,நான் பின்னால் உட்கார்ந்து கொண்டு அருகில் உள்ள புளியம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு பார்க்க முடியாது என கூறியதால் 108 ஆம்புலன்சை வரவழைத்து புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு எனது அனுப்பி வைத்து விட்டு நான் நிரோஷா வீட்டிற்கு சென்று அவரது குழந்தைகளை அழைத்துக் கொண்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எ.த.கு.வி**

இல்லை.